IHP
INSTITUTE FOR HEALTH POLICY

**72, Park Street, Colombo 2, Sri Lanka**
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

## PRESS RELEASE

### திகதி வரை தடையாணை

திகதி : 8 March 2023
நேரம் : 11:59 PM Sri Lanka Time

### மேலும் தகவல்களுக்கு அணுகவும்

டல்ரீன் பாத்லாட்
மின்னஞ்சல் : dalreen ‘at’ ihp.lk

### பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள

மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi ‘at’ ihp.lk Twitter: @ravirannaneliya

# அரகலய மற்றும் ஜனநாயகத்திற்கு பொதுமக்கள் மத்தியில் அதிகரிக்கும் மற்றும் பரவலான ஆதரவு உள்ளது, ஆனால் இலங்கையர்க்கு முதலாளித்துவம் புளித்துவிட்டது

அக்டோ. 2022 முதல் பிப். 2023. நடத்தப்பட்ட SLOTS கருத்துக்கணிப்பின்படி கோட்டாபய ராஜபக்சவின் ஜனாதிபதி பதவி வீழ்ச்சியடைந்து ஆறு மாதங்களுக்குப் பின்னர் அரகலயா மற்றும் ஜனநாயகத்திற்கான ஆதரவு அதிகமாக இருப்பதோடு அதிகரித்து வருகிறது. பத்து இலங்கையர்களில் ஆறு பேர் (55%) அரகலயாவைப் பற்றி சாதகமான அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தனர் மற்றும் ஐந்தில் ஒரு இலங்கையர் (18%) மட்டுமே எதிர்மறையான அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தனர். அரகலயாவின் நிகர சாதகத்தன்மை 2022-ன் பிற்பகுதியிலிருந்து 2023-ன் முற்பகுதி வரை 16 புள்ளிகள் அதிகரித்தது +26 இலிருந்து +42 ற்கு சென்றது.


பெரும்பாலான இலங்கையர்களுக்கு ஜனநாயகம் (+20) மற்றும் சோசியலிசம் (+32) பற்றி சாதகமான கருத்துக்கள் உள்ளதோடு, 2022 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து 2023 ஆம் ஆண்டின் முற்பகுதி வரை இரண்டிற்கும் சாதகத்தன்மை 14

புள்ளிகள் அதிகரித்தது. இதற்கு நேர்மாறாக ஐந்தில் ஒரு இலங்கையர் (22%) மட்டுமே முதலாளித்துவத்தைப் பற்றிய நேர்மறையான பார்வையைக் கொண்டுள்ளனர். அதே காலகட்டத்தில் முதலாளித்துவத்துக்கான நிகர சாதகத்தன்மை சிறிய சரிவைக் காட்டுகிறது.

---

பெரும்பாலான இலங்கையர்களுக்கு அரகலயா, ஜனநாயகம் மற்றும் சோசியலிசம்/சமவுடைமை பற்றி சாதகமான அபிப்பிராயம் உள்ளது ஆனால் முதலாளித்துவம் பற்றி எதிர்மறையான அபிப்பிராயம் உள்ளது.

__________ பற்றி சாதகமான அல்லது சாதகமில்லாத அபிப்பிராயம் உள்ளதாக கூறிய %




சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வு (SLOTS)

2022 அக்டோ 4 - 2023 பிப் 24 வரையிலான வயது வந்தவர்களின்(18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) கருத்துக்கணிப்பு. மறுப்புகள் மற்றும், எல்லா கேள்விகளையும் சேர்த்து பார்க்கையில் கேட்கப்ப ட்டது பற்றி கேள்விப்பட்டதில்லை என்று பதிலளித்த சுமார் 4-6% சதவிதத்தினரும் விலக்கப்பட்டனர். அனைத்து மதிப்பீடுகளும் தேசிய மக்கள்தொகைக்கு ஏற்றவாறு எடையிடப்பட்டுள்ளன.

---

இளைஞர்கள் அரகலயாவின் மிகவும் ஆர்வமுள்ள ஆதரவாளர்கள் என்ற பொது உணர்வை SLOTS வாக்கெடுப்பு உறுதிப்படுத்துகிறது. நிகர சாதகத்தன்மை இளைஞர்களிடையே (18-29 வயது) அதிகமாக (62%) உள்ளதோடு வயது கூடக்கூட சாதகத்தன்மை குறைகிறது. என்றாலும் எல்லா வயதினரிடையேயும் நிகர சாதகத்தன்மை நேர்மறையாக உள்ளது. வயதான இலங்கையர்களை விட (-17%) இளைஞர்கள் முதலாளித்துவம் பற்றி மிகவும் எதிர்மறையான கண்ணோட்டத்தைக்(நிகர சாதகத்தன்மை -44%) கொண்டுள்ளனர்.

இதற்கு நேர்மாறாக, அரகலயாவுக்கான ஆதரவு இனக்குழுக்கள் மற்றும் மாகாணங்கள் முழுவதும் ஒத்து இருப்பதோடு, அரகலயாவுக்கான ஆதரவு சிங்கள சமூகம் அல்லது மேற்கு மாகாணம் அல்லது நகரப்புறங்களில் வசிப்பவர்களிடையே மட்டுமில்லாமல் பரவலாக உள்ளது என்பதையும் SLOTS வாக்கெடுப்பு குறிக்கிறது.

மிகவும் ஆச்சரியமான விடயம் என்னவென்றால் அரகலைய மீது மிகவும் சாதகமான கருத்தும் முதலாளித்துவம் மீது மிகவும் எதிர்மறையான சாதகத்தன்மை கருத்தும் உடையவர்கள் கல்வியறிவு அதிகம் உடையவர்களும் வசதியான இலங்கையர்களும் தான். பல்கலைகழக கல்வி உடைய

இலங்கையர்களிடையே முதலாளித்துவம் மீதான எதிர்மறையான சாதகத்தன்மை கருத்து -42%.

SLOTS ஆய்வாளர்களில் ஒருவரான பேராசிரியர் சிரி ஹெட்டிகே, இதுவரை காணப்படாத "தற்போதைய பொருளாதார நெருக்கடி யை இது பிரதிபலிக்கலாம் என்று தெரிவித்தார். தற்போதைய பொருளாதார நெருக்கடி ஏழைகளை மட்டுமல்லாமல் "இதுவரை சிறப்புரிமை பெற்ற சமூக மற்றும் பொருளாதார பின்னணியின் பாதுகாப்புடைய குழுக்களையும் " பாதித்துள்ளது.

கடந்த மூன்று தசாப்தங்களாக மேலாதிக்க முன்னுதாரண பொருளாதாரக் கொள்கையாக இருந்தது "முதலாளித்துவம்" என்பதும் பல இலங்கையரின் கண்ணோட்டம். இந்த மேலாதிக்க முன்னுதாரண கொள்கை அடிப்படையில் தோல்வியடைந்தது என்ற பொதுமக்களின் உணர்வே, "முதலாளித்துவம்" பற்றிய எதிர்மறையான கண்ணோட்டத்திற்கும் "சோசியலிசம்/சமவுடைமை" பற்றிய சாதகமான கண்ணோட்டத்திற்கும் காரணமாக இருக்கலாம்.

அரகலயாவைப் பற்றிய கருத்துக்களில் உள்ள முக்கிய வேறுபாடுகள் பெரும்பாலும் கட்சி அரசியல் சார்புடையவை. அரகலயாவிற்கு பரவலான ஆதரவு இருந்தபோதிலும், எஸ்.எல்.பி.பி. ஆதரவாளர்களிடையே அரகலயாவிற்கு எதிர்மறையான நிகர சாதகத்தன்மை -33% ஆகவும், அதே சமயம் கலந்துள்ள யூ.என்.பி ஆதரவாளர்கள் இடையே அரகலயாவிற்கான நிகர சாதகத்தன்மை 11% மட்டுமென உள்ளது. இது அநேகமாக கோடாபய ராஜபக்ஷேவின் நிர்வாகத்திற்கு அரகலயா எதிராக காணப்பட்டதன் காரணமாகவும், இன்று பெரும்பாலான யூ.என்.பி ஆதரவாளர்கள் முன்னாள் எஸ்.எல்.பி.பி வாக்காளர்கள் என்பதையும் பிரதிபலிக்கலாம்.

முழு அறிக்கை ihp.lk இலிருந்து கிடைக்கும்

Institute for Health Policy, March 2023, "The Aragalaya and democracy have widespread support amongst the public, but Sri Lankans are souring on capitalism", SLOTS Report #2023-04. Available at http://ihp.lk/publications/docs/SLOTSReport202304.pdf.

## IHP பற்றி

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

## முறை

04/10/2022– 01/03/2023 வரை 2,720 வயது வந்தவர்களை(18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) நேர்காணல் செய்ததைக்கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது. ஒட்டுமொத்த சாதகத்தன்மை மதிப்பீடிற்கான பிழை விழிம்பு ± 4-5%(95% நம்பிக்கை நிலை). முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்த கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தவர்களின்(18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு முறையின் மூலம் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஒர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் நேர்கானல்களை SLOTS ஒருங்கிணைக்கிறது.

சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் மொழிகளில் பதிலளிப்பவர்கள் விரும்பும் ஒரு மொழியில் நேர்காணல் செய்யப்பட்டது. குறிப்பாக சாதகத்தன்மை பற்றி கேட்கப்படும் கேள்வி வருமாறு: “__________ பற்றிய உங்கள் அபிப்பிராயம் சாதகமானதா அல்லது சாதகமில்லாததா அல்லது [அதைப்பற்றி] நிச்சயமில்லையா அல்லது [அதைப்பற்றி] எந்த அபிப்பிராயமும் இல்லையா என்று என்னிடம் கூற முடியுமா?”

சாதகமான அல்லது சாதகமில்லாத அபிப்பிராயம் தெரிவித்த சதவிதத்தினரின் சராசரியே நிகர சாதகத்தன்மையாகும்.

SLOTS சாதகத்தன்மை என்று மதிப்பிடுவது, மக்களின் எண்ணங்கள்/கண்ணோட்டத்தை மட்டுமே. மேலும் அரகலய, சனநாயகம், முதலாளித்துவம் மற்றும் சோசியலிசம்/சமவுடைமை போன்ற வார்த்தைகளின் மக்களின் புரிதலை அல்ல.

முடிவுகள் இலங்கையில் உள்ள அனைத்து வயது வந்தவர்களின் வயது, பாலினம், இனக்குழு, மதம், வீட்டு வருமானம், கல்வி மற்றும் மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் எடையிடப்பட்டன.

## நிதியுதவி

இலங்கையில் நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை, ஐக்கிய ராஜியத்தின் உடல்நலம் மற்றும் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK NIHR) ஆசியா மன்றம்(The Asia Foundation) மற்றும் ஏனையோர் SLOTS ஆய்விற்கு நிதியுதவி அளித்துள்ளனர். ஆனால் ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருள்விளக்கத்திலோ ஆதரவாளர்கள் பங்கு வகிக்கவில்லை. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.